உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டுப் பழனியாண்ட[illegible]

தேவாரப் பதி[illegible]

இ ஃ ஐ ராசிபுரம் தாலூக்கா
...மூர்த்திப்பாளையம் ஜங்கம கேதார கோத்திரம
ராமசாமி ஐயர் குமாரன்
குழந்தை வடிவேலய்யரால்
இயற்றப்பட்டு
ஷையார் தம்பி அருணாசலய்யர் குமாரர்
சின்னசாமி ஐயர் வேண்டுகோளின்படி
சேலம் தாலூக்கா வேப்பிலைப்பட்டி
...ஊர் சு. தென்பழனி ஐயர்
குமாரர்
...கம முத்துசாமி ஐயரால்
...க்கார் அச்சியந்திரசாலையிற்
...பிக்கப்பட்டது.

1925.

Q26:417
N25
223208

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டுப் பழனியாண்டவர்

தேவாரப் பதிகம்.

இஃது ராசீபுரம் தாலூக்கா

ஈசுரமூர்த்திப்பாளையம் ஜங்கம கேதார கோத்திரம்

ராமசாமி ஐயர் குமாரன்

குழந்தை வடிவேலய்யரால்

இயற்றப்பட்டு

டையார் தம்பி அருணாசலய்யர் குமாரர்

சின்னசாமி ஐயர் வேண்டுகோளின்படி

சேலம் தாலூக்கா வேப்பிலைப்பட்டி

முடியனூர் கு. தேண்டபழனி ஐயர்

குமாரர்

சீஷன் ஜங்கம முத்துசாமி ஐயரால்

சேலம் பட்டக்கார் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1925. [அணா 4

உ

திருச்சிற்றம்பலம்.

விநாயகர் தேவாரம்:

நல்ல திருமுகமும் விநாயகனே காத்தருள்வாய்
ஆனைமுகமுடைய ஐயாவும் காத்தருள்வாய்
மெய்யாவுன் திருமுகத்தே மேன்மைதரவேணுமெய்யா
ஐங்கரம் படைத்தோனே அனைவரையும் காத்தோனே
ஆகிபிர்மாவே எங்கும் ஆலயமாய்க்கொண்டோனே
எல்லாவினைகளையும் எடுத்தறுக்கும் ஐயாவே
இவ்வுரிதுணைவருவாய் என்சோணேசன் ஐயாவே
மெய்ப்பொன்வரக்கொடுப்பாய் மேன்மைவரந்தான் தருவாய்
இய்யீர்வரந்தருவாய் நீ சொன்னவரந்தான் தருவாய்
உன்[illegible]பால்தவறுமல் காத்தெடுப்பாய் விநாயகனே
என்னு நேம்காப்பதற்கு எல்லோர்க்கும்தேவோனே
உன்கண்ணுரைப்பாருமைபாகரிமுகப்பிள்ளையாரே
எல்லாப்பொருள்களுக்கும் எதிர்வரும்விநாயகனே
நீர்தவசுக்குப்பிள்ளையப்பா நீர்தவறுதுவக்தவனே
வர்தவினை பறுக்கும் நீர்வண்ணமுக விநாயகனே
திருவண்ணமலை தனிலே நீர்என்னுதபிள்ளையாரே

நீர்கண்ணாலேபாருமையா நீர்கைகுளிரஎந்நாளும்
நீர் கொடுத்த வரங்களையும் கூர்மையுடன் காருமைய்யா
உன்னை அடுத்தவரைக் காப்பதற்கு ஆதரவுசெய்யுமெய்யா
ஆனை முகத்தோனே ஐங்கரப் பெருமானே
உன்னை கண்டு மனந்தொழுகும் கணபதியே
கொண்டும் விநாயகனே குணமறிந்து
பண்டும் பலாதிகள் நாளும்வைத்து
தினந்தோரும் கணபதியைக் கைதொழுதாக்கால் [போதும்
அவர்க்கும் கொண்டும் மனந்தேறி குணங்கொடுப்பார் எப்
காசுப்பணமுமல்ல அவரைக் கண்டு தொழுதுவந்தால்
நேசமாய் கூட அவர் நிச்சயமாய் தானிருப்பார்
அவர் தேவாதிதேவருக்கும் அவர் தெளிந்த விநாயகனார்
தேவருக்கும் கொண்டகுரு சிவனுக்கும் வந்தகுரு
அவர் தகப்பன் குருசுவாமி அவர்தார்வேந்தன் விநாயகனார்
வல்லவி இடப்பாகன் அவர் வந்தவர்க்கும் வினைதீர்க்கும்
[ங்கிநிற்பார்
அவர் வேதப்பொருளுக்கெல்லாம் அவர் விநாயகனாய் விள
வேழமுகம் படைத்தோர் பானைபோல் வயர்படைத்தோர்
அவர் படைத்த வயற்றுக்கெல்லாம் பருந்து அன்னம்தந்திடு
[வார்
தொந்திவயிற்படைத்த அவர்தோன்றும் வயிற்றுக்கெல்லாம்
எந்நாளும் அன்னம் அவர்தொழுத வயற்றுக்கெல்லாம்
எந்நாளும் அன்னம் அவர் திருகரத்தால் கொடுத்திடுவார்
அவர்முன்னாலேநின்று அவரைமேன்மைவரங்கேட்டவர்க்கு
அவரைகண்ணாலேபார்த்து அவர்கணபதியும்எம்பெருமான
குழந்தை வரங்களெல்லாம் அவர்கூடவே வாங்கொடுப்பார்.

சிவமயம்.

கந்தர் தேவாரம்.

சித்ராத்திரி-வூ சித்திரை-மீ 10 உ மேல்தேசம் சஞ்சாரம்

இஷ்டமுடன் எல்லையிலே கஷ்டமில்லை தீர்க்கவந்த கந்தன்
இந்த மூவுலகு மும்மூர்த்தி பாளையத்தில்
இந்த முத்தியுடன் தந்தவரம் சத்திவடிவேல்
எத்திசையும்புகழும் கந்தன் ஏகாம்பர நாதன்
ஏரிகரை வாழுமுனி அவர் பேர்படைத்து வளர்ந்தவேல்
நேசமுடன் இருபேரும் வாசமுடன் என்னாளும்வாழ்க
வல்லுலகில் குடியிருக்க நான் கோபுரங்களுண்டாக்கிவைக்க
வையகத்தில் பிச்சைக்கு நான்வந்தேன் பெருமானும்
வந்தவொரு பிச்சையை வாங்குந்திருமுகமும்
கொந்தவொரு பிச்சையை கொடிகொண்டேன்
நான் யோகாத ஆறுமுகம் நான் பிச்சைக்கே வந்தேன்
என்னை கொடிகொண்டு ஏகாதிக்கோ நன்படிகொண்ட சந்நாசி
இந்த பாருலகில்

சித்ராத்திரி-வூ மாசி-மீ 1-உ 2-வது வடதேசம் சஞ்சாரம்

இந்தஅடிகொண்ட கோபுரங்கள்முடிவுகொண்டு தானும்செய்வத
இந்தபடி கொண்டபழனிமலை இந்தபாளையத்து இடபுறத்தே [ங்கு
இந்த பதிகொண்ட சந்நாசி இந்தபாருலகில்

இந்த விதிகொண்டடைக்குமலை வேஷம் கொண்டேன்
அந்த இருநாமம் பெருபெரும் மூர்த்திகொண்டு
தேசத்து பிச்சைக்கே வந்தோம் இப்போது
வந்ததொரு பிச்சையை வாங்கி கைகொண்டோம்
நொந்ததொரு பிச்சையை நோடிகொண்டேன் படிக்குள்ளே
நான் நோகாத ஆறுமுகம் நான் பார தேவந்தேனிப்போ பரதேசி

ஷை பங்குனி-மீ 14-உ 3-வது கீழ்தேசம் சஞ்சாரம்.

எக்காலமும் கண்டதீபம் நான் வாரங்கொண்டு வைப்பதற்கும்
வந்தேன் கீழ்முகமும் தொழுதை வடிவேலுடையாள்
கந்தமலர்வளர்கையேந்தி பிச்சைவாங்கவந்தேனிந்தவையகத்தே
இதைகண்ணுரபார்த்தவர்கள் எங்களைக்காதாரகேட்டவாகள்
என்னை வாதாடி நீக்காதிங்கோ நான் வந்தேன் பிறவனாயே
வந்ததொரு பிச்சையை வெளியிட்டேன் இந்த வெயிலிலே
அளவிவிட்ட பஞ்சதுபோல் என் அங்கங்கொண்டேன் என் அங்க
என்னுளும் பால்வளர இந்தஎகன்னின்ற கோபுரத்தில் [முத்தே
இவனை சுதனாக சூழ்ந்தவர்க்கு சொந்தமுண்டு வையகத்தே

ரௌத்திரி-ஹு சித்திரை-மீ 20-உ 4-வது சஞ்சாரம் தென்தேசம்
சித்திராபௌர்ணியில் ஆன உத்திரவு.

ஆதியாய் தோன்றிநின்ற என் அருமையாய் மாரிமுத்து
நான்பேயனுன்பெருமானுக்கே யித்தவாயினுல் வாக்குறுதிசெய்த
வன்மையுடன் எந்தனையும் காக்கும் தாயே [தாயே
இந்த வையகத்தில் நிலைநிந்திருக்கும் மாரித்தாயே

ஸீவந்தவர்க்கு வரங்கொடுக்கும் மாரிமுத்து
உன்னைத்தாயேயென் றுநம்பினோர்க்கு வரங்கொடுக்கும்மாரிமுத்து
உன்னை வணங்கினொரு சிசுவுமெத்த பாலர்களை எந்நாளும
பாலன்னம் ஊட்டி வைக்கும் மாரிமுத்து
நாம்முன்னாலே இருபேரும் வாக்குறுதி செய்தபடி
எந்நாளும் கந்தனுமே இன்பமுடன் இருபேரும்
நம்மை கண்ணாரப்பார்த்து சுகனுக்கே
என்னாளும் வரங் கொடுக்கவேணும் அம்மா
பின்புறம் பேசுவாரை பேய்போல திரியவைக்க நீ
நீ ஆயிமகமாயி என் அண்டையிலே யிருக்க அம்மா
இப்போ ஜோதியுடன் இருபேரும் கோபுரங்களுண்டாக்கிவைக்க
நாம் குடியிருக்கவேணும் கொம்பனையே மாரிமுத்து
அப்படியே கோரினேன் குழந்தைவடிவேலுஐயன்
இந்தபாளையத்து மகமாயி பராபராசத்தி உத்தமியே
உன்பக்கம் இடபுறத்தே இந்த பண்டிதங்களுண்டாக்கிவைக்க
நீ பாருமம்மா இந்த பண்டாரத்தே

உ

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

கிருஷ்ணர் தேவாரம்.

[illegible]கா கோவிந்தா ஆதிமூலப்பொருளே
அ[illegible]பெறுவென்று நாடினேன் நெஞ்சில்
கொழுந்தை வடிவேலு ஐயன்கொண்டத் திருநாமம்

மண்டல நாராயணு குழந்தையை மதித்தென்னை பாருமெய்யா
அது உன்னைகண்டது போன்பேடானே என்னெஞ்சம் கருகுதாா
ஏழுமலைநாதா உன்பாதத்தை எடுத்தேன் திருமுடியில் [மோரே
அடுத்தமேதார் மைந்தரையும் உன்னையன்புவைத்துக்காருமெய்யா
துளசிமலையபூகா நீர் துணையிருந்து காருமெய்யா
எடுத்தேன் உன்திருமுடியை ஏழையை என்னைஎம்பெருமாள்
[காருமெய்யா
உன் பொன்னூந்திருமுகத்தை என் அப்பனே முன்வந்துகாருமை
[துவிடும்
காட்டினல் களைதெளியும் என் அப்பனே என்கவலையெலாம் தீர்க்
கண்டு உன்பாதத்தை நம்பினேன் கதி என்று உன்னையே தொழு
[தேனே
வடமலைபூண்டவும்ருமோனேவையகமெல்லாமும்நீவிளங்கோனே
பச்சைமுகம்படைத்தோனே பசித்தவர்க்கன்னமும் தருவோனே
உன்பாதத்தை பணிந்தோர்க்கு பாலன்னம் தருவாயே
ஓரடி நிரைந்தாாமா ஐயா உன்னையும் கெதியென்று நம்பினேனு
எங்குந் திருநாமம் விளங்குது உலகத்தில் [ன்பாதம்
எடுத்தம் திருக்கோடி வெளிச்சமும் பாராய்
ஏகாபராபரா என்னையும் காராய் லக்ஷ்மி திருநேத்திரா
உன் தொண்டன் லஜ்ஜையை எல்லாம்முடிக்குமெய்யா
உன்னை யண்டினபிள்ளையை யாதரிக்கும் திருநாமம்
வேலாயுதங்கொண்டு விழங்கோனே
வெல்லும் பொருளையெல்லாம் நீ வினைதீர்க்கும் பண்டிதா
உன்சொல்லு தவருமல் சோதிக்கிறீரையா
கழுகுமாமலைதனில் உன்கை தழுகுமையா
மலராக்காரனை மகிழ்ந்துந் திருநாமம்
தோளில் வளையல்தரித்து தோன்றிட விலைகூறினர்
ஆரம்மா தாயேநீ அன்புடன் வளையல்தொடுவாய்
சிவலோகம் வளையலிது நீ சீக்கிரம்கொள்ளுவாய்
செந்தாமலரைப்போலே முகமதுகாணுது
வந்துமதிப் பிடுவாயிது வையகத்துக்கேத்த வளையல்
இதுதொந்த வளையல்பாரம்மா இது நீதொட்டுக்குறிசொல்லம்மா.

உ

சிவமயம்.

கந்தர் தேவாரம்.

வேடான வேள்குறிச்சி அந்த விளங்கும் சின்ன பழனிமலை
இந்த கொல்லிமலைமீதில் அவர் கூத்தாடுங்கூகமலை
இந்தவல்வினையை தீர்த்துவரும் இந்த வையாபுரியானும்
இந்த அம்மாவாசைதவறாமல் அந்த ஆலயத்தை சுத்திநேர்க்கு
அவர்வேண்டும்வரங்கொடுத்தார் அவர்வினைகளெலாம்பறந்தோட
அவரை சுத்திநின்ற பேர்களுக்கு குடுதெல்லாம் விலக்கிவிட்டார்
[ள்ளிவிட்டார்
அவரை பட்சமில்லாபேர்களுக்கு அவர்மேல் இஷ்டமில்லாமல்த
அவர் கஷ்டவினை தீரவில்லை அவர்கல்லரையாய் போய்விட்டார்
இந்தபாளையம் பாளையத்தில் பரமயீசுரமூர்த்தி பாளையத்தில்
அந்த வீரசைவமுடன் அந்த விளங்கிவரும் ஜங்கமரும்
அந்த திருக்கேதார கோத்திரத்தில் சூட்சமுடன் சுப்பையன்
ராமையனை கந்தனும் இந்த அருமையுள்ள குழந்தை வடிவேலையன்
இந்த யிருவருமே கூடிக்கொண்டு அந்த பரமகதி சேருவதற்கு
இந்த கூகைமலையை யெப்போதும் அவர் குலதெய்வமாகஎண்ணி
அவரை மெய்யாக நெஞ்சிலெண்ணி மிச்சம் கைகூப்பினின்றும்
அவர் தைஅம்மாவாசை தவறாமல் அவர் தப்பாதே தா கடந்தார்
அந்த வையாபுரியானும் இவர்களுக்கு மெய்யாக நின்றரு
இவர்க்கு மேன்மைதரவேணுமென்றும் அவர் கால்நடையை
[பார்த்தா கந்தனைப் வந்தாரே
அப்பவே கூடவே வாரேனென்றும் அவர் குலதெய்வமானாரே

அவர் சொல்லையிலேவந்தாரே குழந்தை வடிவேலஐயர்மீதில்
குறாங்க சித்து விளையாடினரே
வையகத்து ஜனங்களுக்கும் பொய்தள்ளி நின்றோர்க்கும் [டாரு
அவர் மெய்யான வரங்கொடுத்தார் அவர் மேன்மை வரங்கொண்
எப்போதும் தைமாசம் அமாவாசை தவறாமல் ஜங்கமர்க்குக்குரு
இந்த பங்குனி உத்திரத்தில் பட்சமுடன் அன்னதானம் [பூஜை
இந்தயிடத்தில் யார்வந்து செய்தாலும் அவர்
சொந்தமுடன் வரங்களையும் சேரவே கைகொள்ளலாம்
எல்லார்ஜனங்களுக்கும் அவர் யின்பங்கொண்டுசொன்னவாக்கும்
அது தப்பாது ஒருகால் அது தவறாது நடந்துவரும்
எப்போதும் பொய்மைத்தள்ளி யின்பங்கொண்டு மெய்சேர்ந்தி
இதை தப்பாதுமனதில் வைத்து இது தவறாது நடந்தவர்க்கு
எப்போதும் குறைவுமில்லை எண்ணிவந்த மானிடர்க்கு
இது தப்பாது நடந்துவரும் அவர் தரித்திரமும் நான்திரும்
இதைஎண்ணாத பேர்களுக்கு அவர் மண்ணும்விளையாது மக்கள்
மணம் கூடாது
அவர் குலதெய்வம் வராது அவர் கோத்திரமும் பலியாது
அவர்களுக்கு கஞ்சிகளைப்பு கடுக பிச்சைகிட்டாது
அவர் கந்தன் திருவாக்கு அவர் கண்டபடி சொன்னாரே
அதை நிச்சயமென்று நினைத்தோர்க்கு நிறைபடியுந்தான்கிடைக்
இதுநிச்சயமென்றெண்ணாதோர்க்கும்நிறைபடியும்கிட்டாது [கும்
கட்டவும் ஆடையில்லை கைபொருளும் தானுமில்லை
இதைக்கண்டு மனந்தேறி கந்தர் முகங் காணும்கான் [கம்
இந்த தெண்டாயுதம் கைபிடித்த இந்த மண்டலத்தே யாருமிங்
இந்த தேவாதி தேவருக்குந் தெளிந்துவிளையாடுலிங்கம்
இந்த லிங்கத் தொருபூசையை யாருகைக் கொண்டாலும்
மங்களமாய் வாழ்ந்திருப்பார் மகாதவசு நிறைவேரும்
சுமந்தன் வரமும் அவர் மனங்கண்டு கொடுத்திடுவார்
இந்த வரங்களெல்லாம் தவறாது ஒருபோதும்
கார்மையுள்ள கார்த்திகை மாதம் கணநாதா
அரகார சிவசிவாவென்று ஆனந்தம் கொண்ட நெஞ்சில்
அருமையாய் பெருமானே ஆனந்தம் கொண்ட நெஞ்சில்
தெண்டாயுதம் கைபிடித்த சிவனையும் மனதிலூன்றி
எந்நாளும் தொழுதவர்க்கு அவர் எண்ணத்தில் வைத்தவர்க்கும்

இருந்தப்பிணிகளெல்லாம் யிருந்தது பார்த்தோடும்
அதை நம்பாத நெஞ்சில் அவர் நாடார் ஒருபோதும்
இந்த மண்டலத்து பண்டாரத்துக்கு அவர் மனமும் வருகாதே
அவரை தொண்டனாய் நின்றோர்க்கும் அவரை துணை என்று நம்
மண்டலத்திலன்னம் மகாபெருமை தான் தருவார் [பினோர்க்கும்
அவள் சுந்தரி ஆறுமுகம் அவர் சோதனைக்குள்ளவர்காண்
அவர் சோதனைபொருந்தோர்க்கு அவர் பாதத்தை தொழுதோர்
[க்கும்
அவரைபட்சமாய்தொழுதோர்க்கும்நித்தம்அன்னம்கொடுப்பாரு
நாமள் சேமித்த வரங்களெல்லாம் அவர் நிட்சயமாய்கொடுப்பாரு
நாமள் பிச்சையும்காரணக அவர் பாதத்தை நிட்சயமாய் எண்ண
[வேணும்
அவர் கூட வரங்கொடுப்பார் அவர்நம்மைகூட்டையும்காத்திடுவார்
அவர் நம்மை விட்டையும் பெருகச் செய்வார் நம்ம காட்டையும்
விளையச்செய்வார்
நம்ம கட்டுதரையை விளங்கச்செய்வார் நம்மையும் காத்திடுவார்
ஈனுத பசுவைகூட யீன்று பால் கொடுக்கவைப்பார்
அவர் எண்ணாத காவடிகள் அவர் பின்பமாய் கட்டியாடிடுவார்
அவர் பால்பொங்கும் பழனிமலை அவர் பறந்துவிளையாடிடுவார்
அவர் கூர்வடிவேல் கொண்ட குழந்தைவடிவேல் முருகன்
நம்மை கலந்துவிளையாடவைப்பார் நம்ப கவலைஎல்லாம் தீர்த்து
[வைப்பார்
நம்ம குடும்பச் சமுசாரம் அவர் நம்பளுக்கு கொண்டவரம் தான்
[கொடுப்பார்
அவர் நம்மைகூடவே வாழ்ந்து நிற்பார் நம்ம குடிகளையும் காத்
[திடுவார்
நம்ம கூடுகலையாமல் அவர் மறு ஜென்மம் இல்லாமல்
அவர் நம்மை பிறவிகடல்நீக்கி அவர் நம்மளுக்கு புண்ணியத்தே
[தந்தடுவார்
விரோதி கிருதுவருஷம் புரட்டாசிமாதம் இருபத்திஅஞ்சாந் தே
விரோதிகிருது தனில் வேணபடி தவமிருந்தும் [திமுதல்
தாரணியில் பிள்ளைகளை கும்பலாய் கூட்டிநின்றும்
இந்தகந்தர் வடிவேலுக்கு கடுந்தவசு தானிருந்து
அவர் சொந்தமுடன் கந்தனையும் சேர்ந்து முகம்நோக்கி
இந்தக் வேலூர்ஐயர் கூப்பி நின்றார் திருகரத்தை

223208

அவர் கொண்டுதவமிருந்தார் சி[illegible]வந்தே யாருமிலிருந்தே
அவர் தொண்டனாய்த்தவமிருந்தார் இந்த [illegible]ந்தே
இந்த மண்டல தவசிலேயும் மதிப்[illegible]டார் கந்தனிங்கு
அவர் ஆயுசு மட்டம்யென்று அதிசயத்தே சொன்னாரு
அவர் நல்லாவும் பிழைக்கும்போது அவர் நலமுடனே கைதட்டி
இந்த குழந்தை வடிவேலஐயர் அவர் கூடெல்லாம் நாடொடுங்கி
அவர் கூட்டினாரேகையிரண்டை
கூட்டியிருகைரெண்டை யவர் குடிப்பார் தாய்பிச்சையென்று
தாய்மனமும் தானும்வந்து தம்பியென்ஜாதி உன்னுமுலைதாயும்
என்னுதை அன்னத்தை நான் இன்பமுடன் தாரேனென்றும்
என்மனமாற கொண்டுவந்து மன மகிழ்ச்சியுடன் தந்ததுண்டு
யிதுஎப்போதும் தருவாயாவென்று அவர் யின்பமுடன்கேட்டது
நான்தப்பாமேதாரேனென்று தான்மகிழ சொன்னதுண்டு [ண்டு
ரௌத்திரி வருஷம்தன்னில் மாமுனியும் மாசிமாதத்தில்
ப[illegible]ரொராந் தேதியில் மாசி மகந்தன்னிலும்
இந்த குழந்தை வடிவேல ஐயர் அவர் குறிப்புள்ள சமுசாரம்
ருத்ரா அம்மாளும் சிவனையும் நோக்கி மெத்தை
தெய்வீகம் அடையும்போது நான் சொன்ன சொல்படிக்கு
அவாள் வாக்கினால் வாக்குறுதி அவாள் ஒப்பிடியானை கூப்பிட்டு
நான்என்னைக்கொண்ட குருவுக்கு நீகுடுத்தன்னம் வாருமென்று
அப்படிவாக்குறுதி செய்துவிட்டு அவள்அப்படி தெய்வீகமடை
அப்படியேதாரேனென்றுதங்கைஉன்னுமுலைதாயும் [ந்ததுண்டு
ஆதியிலே சொன்னபடி நன்தாரேனென்றுதானுறுதி சொன்னது
இந்த குழந்தைகள் மூவரையும் கொண்டாள் திருகரத்தில் [ண்டு
கூட [illegible] வா [illegible]ன்றும் கொடுத்து அன்னம் தாரேனென்றும்
எல்லா பொருள்களையும் அவள் யின்பமா[illegible] தானுங்கொண்டு
அஞ்சிப் பயப்படாதிங்கோ நான் அன்புடனே காக்கிறேன்
இந்த கந்தன் மகிமையால் நான் கண்டபடி காக்கிறேன்
ஆனவர்க்கும் வேலவனும் அழுந்தவர்க்கும் தேசிகனும்
[illegible]திருக்கும் செயலாக நின்றவராம்
[illegible] வந்தவர்க்கும் வேல்முருகன் அவர்
[illegible]னும் தப்பாமல்
[illegible]
அவரை நேராக தொழுதோர்க்கும் அவர்நேமித்த வரங்கொடுப்

223207

அவர் அல்லலை நீக்கிடுவார் அவர் அவதிகளை யோட்டிடுவார் [பார்
அவர் சொல்லுதவரூர் சோணகிரி பண்டாரம்
ஆகரா சிவசிவாவென்று இந்த ஆதிமூல கந்தலிங்கத்தை
சிவசிவாவென்று சீர்பெருரும் கந்தலிங்கத்தை
யிரைப்பது ஐந்து நாளா யின்பங்கொண்டு தவமிருந்தும்
யிந்தகூறும் வடிவேலை குறித்தும் தவமிருந்தும்
குழந்தை வடிவேலையர் கூடெல்லாம் தாளொடுங்கி
இருகரத்தைக் கூப்பி யிருந்து தவமிருந்தார் அவர்
ஒடுக்கத்தைப் பார்த்து இன்பமுள்ள கந்தலிங்கம்
கூற்றுவன்வதை உனக்கு கூடவகை யில்லையென்றும்
பார்த்து வரங்கொடுத்தார் பரமலிங்கர் தேசிகனும்
குழந்தைவடிவேலுஐயர் கும்பிட்டு நின்றுமே
உனக்கு சரீரவதையும் சஞ்சலமும் தானீங்க
இன்முடன் கந்தலிங்கம் அவர் கொடுத்தார் திருவரத்தை
என்னோடே சத்தி யின்பமுட னிருந்தீரானால்
நீங்கள் கேழ்க்கும்வரங்களெல்லாம் நிறைவுற்று தாரேனென்று
வையகம் பிழைக்கவேண்டி மெய்யாக நான் கேட்டேன்காண்
மேன்மைதர வேணுமையா
உன்கையார சிவபூஜை கடுகவுங் கொண்டோர்க்கும்
மெய்யான வரங்கொடுக்க மேன்மைதர வேணுமையா
உன்னை சுற்றிநின்ற பேர்களுக்கும் நீர் சுகமான வரங்கொடுக்க
உன்பூஜையை மறக்காமல் நீ புண்ணியத்தை மறவாமல்
ஆசையாய் நடந்தோர்க்கும் உன் அன்புவைத்துக் காருமெய்யா
தேசங்கள் எல்லாம் நீ சித்தாடி காருமெய்யா
நீ சித்தனைப் வந்தவரும் நீ செல்வத்தை தாருமெய்யா
நீ செல்வத்துக்கதிகாரி சிவாசிவா காருமெய்யா
நீ அன்னமகிமை அதிமகிமை யுள்ளவர்காண்
களைத்த பரங்களுக்கு நீ கண்முகத்தை பாருமெய்யா
கந்தனென்றால் கலைதெரியும் நீ கண்குளிரப் பாருமெய்யா
இந்தப்படிக்கு யான் யிணங்கி உன்னை வரங்கேட்டேன்
குழந்தை வடிவேலையர் கொண்டவரந் தாருமெய்யா
உன் ஆலயத்தைசுற்றி அன்னதானம் தான்வளர
எப்போதும் தவறாமல் யிணங்கிவர வேணுமையா
தப்பாத தர்மவரம் நீதவறாது காருமெய்யா

உன்னை காதுக்காது கேட்டவரம் நீ இன்பங்கொண்டு தாருமெய்யா
உன்னை வணக்கமுடன் உன்பாதத்தை பணிந்தோர்க்கும்
என்னவரங் கேட்டாலும் நீர் எண்ணம் வைத்து தாருமெய்யா
இந்தப் படிக்கு நான் ஏழை நான் கேட்டு கொண்டேன்
இந்த குழந்தை வடிவேலுவையோர் உன்னை கும்பிட்டு நின்றனையா.

துந்துபி-வரு சித்திரை-மீ 2-தேதி வெள்ளிவாரம் சித்தர் பாடியது.

அரகரா வென்றுசிவா அரகராவென்று இந்த
ஆனந்தம் கொண்ட நெஞ்சில் நாடிநின்றும்
அரிகோவிந்தா கோவிந்தா வென்று பாடிக்கொண்டு இந்த
ஆதிமூலப் பொருளையும் நாடிக்கொண்டு
அஞ்செழுத்தையும் நெஞ்சில் வைத்துக்கொண்டு நின்று
ஆதரவாய் உலகமெங்கும் நான் பாடிக்கொண்டு
அரகரா சூரியனை நாடிக்கொண்டு
சிவசிவா சந்திரனை தேடிக்கொண்டு
இந்த ஜெகமெல்லாம் ஆடியே பாடிக்கொண்டு
சிவலோகமானதொரு குருவைக்கொண்டு
சிவசிவா மாயமென்ற சீவனைக்கொண்டு
சிவசிவாமாயங்கொண்டு வந்தோம் நாங்கள்
தேசமெங்கும் மானிடர்கள் நிந்தித்தார்கள்
பாசம்வைத்து எங்கள்மீதில் பகவானை நாடிக்கொள்ளுங்கள்
உங்களுக்கு நேசமுடன் சிவபெருமான் துணைவருவார்
வாசமில்லா பேர்களண்டை வருகாரே ஒருபோதும்
அதுக்கு நாமென்னசெய்வோம் நாடிக்கொண்ட நெஞ்சிதனில்
நான் பாடிக்கொண்டேன் பரதேசி பட்சம் கொண்டுவந்தோம்
நாடிக்கொண்ட மானிடர்கள் தாய்மார்களெல்லாம்
இதை நலமுடனே பார்த்துக்கொண்டு நமஸ்கரிங்கள்
இந்த பரமசிவன் பக்கம்வந்து பால்கொடுப்பாரே
இந்த பட்சமில்லா பேர்களண்டே நின்றுபேசாரே
நான்பரதேசி ஐயா பாடிக்கொண்டு நாடிவந்தேனே
பிச்சை கொள்ளவந்தேன் நான்பரதேசி
கோவில் குடியிருக்க நான்வந்தேன் திருதேசி
இந்த தேசமெங்கும் கொண்டாடி பார்த்துக்கொள்ளவும்
கோபுரத்தை சுத்தி மெத்தனினை பாடிக்கொண்டு

இந்தஜெகமெல்லாம் கொண்டாடி நாடிக்கொண்டு
நான் வந்தேன் இறவனும் நான்பரதேசி
கைபிச்சை வாங்கிக்கொண்டுவர வந்தேன்நானும்
கன்குளிர பேசுங்கத்தாய் கடுங்கோபங் கொள்ளாதீர்கள்தாய்
நான் வந்தேன் பரதேசி இந்த வையகத்தே
அரகராமனமே யென்னை யாண்டுக்கொள்ள வா வா
ஆதிபராபரமே உன்பாதம் தா தா
உன் அருமைக்குழந்தையை என்றும் பார்க்கவா வா
உன்னை யாதரித்த குழந்தையை நீ முன்னாலே பார்க்க வா வா
ஆண்டிப் பரதேசியை நீ என்நாளும் காக்க வா வா
உன் ஆலயத்தை சுத்திசேர்க்கும் நீ முன்னாலே வா வா
என்னை என்னாளும் காக்கவும் ஏழையும் கேட்டேன்
என்னை முன்னாலேகாக்க வா வா முருகேசா சித்தனே
ஆதிபராபரமே என்னை ஆண்டுகொள்ள வா வா
அப்பனே உன்பாதம் நான் நித்தம் தொழுதேனே
ஆறுமுகம் வா வா என்னையாண்டுகொள்ள வா வா
அப்பனே உன்பாதம் நித்தம் தொழுதேனே
என்னை ஆதரித்துக்கொள்ள வாவே

துந்துபி௵ கார்த்திகைமீ 17வ கந்தர்தேவார தீபத்திலான்உத்திவு

தாத்தா தாதாநின்றை அந்த தவகுரு சிவபூஜைஎன்றே
காகாகார்த்திகைமாதங்கண்டுமனத்தொழுதேனே கந்தர்சிவமாதம்
சொந்தமென்றுந்தொழுதேனே குக்ஷேமமாகவும்பேசும்வைருன்
சொகுசான வரமென்னகு தந்திடும் கந்தா [டா
சோதிக்க மனம் பார்த்தால் வசனதையும் நீங்காதே
நல்வினை போகாதே என் அப்பனே வையாபுரி முருகோனே
என்னைகையைதாளவிடாதே ஐயா உன்னைகண்டுகொள்ளுமேப்பனே
ஐயா உன்னை நம்பி தாழ்ந்தேனே செகுருநாளாய்
உன்னைகண்டு கொள்ளுவேனே அப்பனே கவலைதிருவோனே
அப்பனே உன்சொந்த மைந்தனுகவும்
அப்பனே நீ சோர்த்திடாய் அன்னம் தாராய்
ஐயா பெத்த பிள்ளையை நீரே உன்கூட பேசவரந் தாருமையா

மூர்த்தி சிவபூசை கைபார் முருகா வரசகாருங் கேட்டையா
மூர்த்தி விநாயகா ஐயா முன்வரச தாருமே ஐயா
சாத்திமே சண்முகா சேர்த்தி உன்பாதம் குருவாகி வந்தவா
சங்கரி உமையாள்பாகா தாமரும் செய்யவும் வாகா
சுந்தரி வள்ளிசமேதரா நீர் சேர்ந்த முகத்தையும் பாராய்
கந்தர் முகமும்வாகா என்னை கையில் கொண்டிடவே ஆளாய்
என்னையும் கருணைவைத்து ஆள்வாய் ஐயா கருமவினையும் காதா
ஐயா காவிடமே தேற்றும் ஐயா என்னை கார்த்திகேய திருமுக மெய்யா.

மங்களம் நித்திய ஜெயமங்களம்.

சுபம்.

காட்டுப் பழனியாண்டவர் தேவாரப் பதிகம

முற்றிற்று.